## மேலும் வலுவான உறவை தி.மு.க. எதிர்நோக்குகிறது!

# மார்க்சிஸ்ட் கம்யூ. கட்சி தேசிய பொதுச்செயலாளராக எம்.ஏ.பேபி தேர்வு!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, ஏப்.8 -

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள எம்.ஏ.பேபி அவர்களுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)-இன் தேசிய பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் தோழர் எம்.ஏ. பேபி அவர்களுக்கு எனது வாழ்த்துகள்.**

**மாணவத் தலைவராக நெருக்கடி நிலையை எதிர்த்ததில் தொடங்கி, கேரளத்தின் கல்வி அமைச்சராக மாநிலக் கல்விப் பாதையை முற்போக்கு நோக்குடன் தீர்மானித்தது என அவரது அரசியல் பயணம் அவரது கொள்கையையும் உறுதியையும் காட்டுகிறது.**

**மதச்சார்பின்மை, சமூகநீதி, கூட்டாட்சி ஆகியவற்றுக்கான நம் ஒன்றிணைந்த போராட்டத்தில் நம்மிடையே மேலும் வலுவான உறவினைத் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் எதிர்நோக்குகிறோம்.**

இவ்வாறு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பதிவில் கூறியுள்ளார்.



திருப்பூர் மாவட்டம், திருமுருகன் பூண்டி நகரம், 23 வது வார்டு அவைத்தலைவர் குருசாமிக்கு செவிப்புலன் உதவிச் சாதனத்தை (காது கேட்கும் கருவி) கழக துணை பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.ராசா வழங்கினார். இதில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், கழக மாணவர் அணி செயலாளர் இராஜீவ்காந்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எஸ்.சரவணன் நம்பி, திருமுருகன் பூண்டி நகரச் செயலாளர் கிருஷ்ணசாமி, கூடலூர் நகர்மன்ற தலைவர் அறிவரசு, 23 வது வார்டு செயலாளர் பிரசன்னா, 13 வது வார்டு நகரமன்ற உறுப்பினர் கு.மதிவாணன், நகர தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் சதீஸ்குமார் உள்பட பலர் பங்கேற்றனர்.

## சாத்தனூர் அணையில் –

# புதிய ஆய்வு மாளிகை கட்ட அரசு ரூ.5 கோடி ஒதுக்கியுள்ளது!

## சட்டப்பேரவையில் - அமைச்சர் துரைமுருகன் பதில்!



**சென்னை, ஏப்.8 -**

**சாத்தனூர் அணையில் புதிய ஆய்வு மாளிகை கட்ட அரசு 5 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது என்று பேரவையில் செங்கம் தொகுதி உறுப்பினர் மு.பெ.கிரி கேள்விக்கு பதிலளிக்கையில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தெரிவித்தார்.**

இது குறித்த விவரம் வருமாறு:-

**மு.பெ.கிரி:** செங்கம் தொகுதி, செங்கத்தில் உள்ள நீர்வளத் துறை அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் துரைமுருகன்** : செங்கம் தொகுதி, செங்கத்திலுள்ள நீர்வளத் துறையில் பழுதடைந்த கட்டடத்தை இடித்துவிட்டு, புதிய பாசனப் பிரிவு கட்டடம் கட்டும் பணி நிதிநிலைமைக் கேற்ப முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படும்.

**மு.பெ.கிரி:** திருவண்ணாமலை மாவட்டத்தில் சாத்தனூர் அணையை காமராஜர் அவர்கள் கட்டினார்கள். குப்பநத்தம் அணையும், செண்பகத் தோப்பு அணையும், மிருகண்டா நதியும் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் தற்போதுள்ள நீர்வளத் துறை அமைச்சர் ஐயா அவர்கள் கட்டினார்கள். இதிலே, குப்பநத்தம் அணையை பராமரிப்பதற்கு இருக்கின்ற அலுவலகம், செங்கம் நகரத்திலே இருக்கின்ற அலுவலகம். அது பழைய ஓட்டுக் கட்டடத்திலே இயங்குகிறது. எனவே, இந்த ஆண்டு அந்தக் கட்டடத்தைக் கட்டித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**அமைச்சர் துரைமுருகன்:** செங்கம் தொகுதி, செங்கத்தில் அமைந்துள்ள செங்கம் பெரியூர் அலுவலகக் கட்டடம் மற்றும் குடியிருப்புக் கட்டடம் ஆகியவை சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டவை. தற்போது இந்தக் கட்டடங்கள் மிகவும் பழுதடைந்துள்ளதை நாங்கள் அறிவோம்.

இந்தக் கட்டடங்களுக்கு நீர்வளத் துறை செங்கம் பெரியூர் அலுவலகக் கட்டடம் மற்றும் குடியிருப்புக் கட்டடம் ஆகியவற்றைக் கட்ட Schedule of Rates பிரகாரம் 1.10 ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. முன்னுரிமை அடிப்படையில் இந்தப் பணி எடுத்துக்கொள்ளப்படும்.

**மு.பெ.கிரி:** சாத்தனூர் அணை என்பது கடந்த காலத்திலே தமிழ்நாட்டில் மிகச் சிறந்த கதாநாயகர்களாக இருந்தவர்களின் காட்சிகள் அமையாத திரைப்படமே இல்லை. அப்படிப்பட்ட சாத்தனூர் அணை 1952-1957-ஆம் ஆண்டுகளிலே கட்டி முடிக்கப்பட்டு, அப்போது கட்டப்பட்ட ஓட்டுக் கட்டடங்களான சுற்றுலா மாளிகை தற்போது மிகவும் சிதிலமடைந்து இருக்கிறது. எனவே, அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு அந்தக் கட்டடத்தை புதுப்பித்து தருவார்களா?

**அமைச்சர் துரைமுருகன்:** சாத்தனூர் அணையில் புதிய ஆய்வு மாளிகை கட்ட அரசினால் 5 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. கூடிய விரையில் அது வேகம் எடுத்துக்கொள்ளும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் ஒன்றிய அரசைக் கண்டித்து சூளகிரியில் மாபெரும் பொதுக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ., சூர்யா கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், ஓசூர் மாநகர மேயர் சத்யா, மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன், மாவட்ட அவைத் தலைவர் யுவராஜ், பொருளாளர் சுகுமாரன், இளைஞர் அணி அமைப்பாளர் சுமன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாகப் புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 08.04.2025 | புதுக்கோட்டை வடக்கு | கந்தர்வக்கோட்டை | பேருந்து நிலையம் அருகில், கந்தர்வக்கோட்டை | தமிழ் கா.அமுதரசன், இ.நேரு |
| 2 | 10.04.2025 | விழுப்புரம் மத்தியம் | வானூர் | சித்தலம்பட்டு ஊராட்சி அலுவலகம், கண்டமங்கலம் | கோவி. லெனின், வீ. வேல்முருகன் |
| 3 | 11.04.2025 | கடலூர் கிழக்கு | கடலூர் | கடலூர் | **திருச்சி சிவா** எம்.பி., கு.அஷ்வின் |
| 4 | 12.04.2025 | நாமக்கல் மேற்கு | திருச்செங்கோடு | தேவனாங்குறிச்சி, திருச்செங்கோடு | பேராசிரியர் **சுப.வீரபாண்டியன்,** க.நந்தகுமார் |
| 5 | 12.04.2025 | கரூர் மாவட்டம் | குளித்தலை | தோகை மலை | செந்தில்வேல், வே.குணஸ்ரீ |
| 6 | 12.04.2025 | கள்ளக்குறிச்சி தெற்கு | கள்ளக்குறிச்சி | வானவரெட்டி ஊராட்சி | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, ஆ.ஷர்மிளா |
| 7 | 14.04.2025 | கள்ளக்குறிச்சி தெற்கு | ரிஷிவந்தியம் | மேல் சிறுவளூர் கூட்டுரோடு | மருத்துவர் ப.மீ.யாழினி, ச.ஐஸ்வர்யா |
| 8 | 19.04.2025 | கடலூர் கிழக்கு | புவனகிரி | கம்மாபுரம் | எழுத்தாளர் வே.மதிமாறன், ர.கோமதி |
| 9 | 20.04.2025 | கடலூர் கிழக்கு | குறிஞ்சிப்பாடி | குள்ளஞ்சாவடி | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, நா.சத்தியப்பிரியன் |
| 10 | 26.04.2025 | கடலூர் கிழக்கு | சிதம்பரம் | பரங்கிப்பேட்டை | **நாஞ்சில் சம்பத்,** க.செல்வமணி |
| 11 | 27.04.2025 | கடலூர் கிழக்கு | காட்டுமன்னார்கோயில் | திருமுட்டம் | வழக்கறிஞர் ராஜீவ் காந்தி, க.தமிழ்மணி |

அன்பகம், சென்னை – 18.
நாள் : 06–04–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி